## தலைப்பு 192 – சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணக்கம் செய்ய முடியாது. மேலும், இதன் காரணமாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த சந்தரப்பங்களிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளும் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளும் சமர்ப்பித்தல் சிரமத்தின் காரணமாக முடியாது போயிருந்தது. துரிதமாக தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். |

## 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 31 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 273,577,140 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 147,716,561 தொகை எஞ்சியிருந்தது. அந்த சேமிப்புகள் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தன. | நிதியேற்பாடுகள் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | 2018 மே 12 ஆந் திகதி இந்த அமைச்சு அரச நிர்வாக அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்ததுடன், 2018 நவம்பர் 05 ஆந் திகதி சட்டம் மற்றும் ஒழுங்கு விடயப்பரப்பு பாதுகாப்பு அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டது. இந்த மாற்றங்களினை அடிப்படையாக கொண்டு ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட விடயப்பரப்பு மாற்றமடைந்தமையால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) 15 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,580,460,000 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,202,452,583 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்புகள் 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆண்டினுள் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 784,077,872 ஆன போதிலும், ACA-2 (II) இன் பிரகாரம் அது ரூபா 679,557,046 ஆன போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் சொத்துக்களின் அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 595,748,110 ஆகும். | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் அமைச்சின் ஆவணங்களை பரிசோதித்து இனங்காண முடியாமையால் மேலும் ஆழமாக ஆராய்ந்து எதிர்வரும் காலங்களில் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.4 பொறுப்புகள் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரி திணைக்களம் சமர்ப்பித்த பொறுப்புகளின் பெறுமதி ரூபா 704,837,693 ஆன போதிலும், நிதிக்கூற்றிலான குறிப்பு இலக்கம் (iii) இன் பிரகாரம் அந்த பொறுப்புகளின் பெறுமதி ரூபா 680,761,741 ஆனமையால் ரூபா 24,075,952 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விடயம் உரித்தாவது விசேட செயலணிக்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி உப குழுவின் கணக்குகளுக்காகும். திறைசேரி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் விசேட செயலணியின் கணக்குகளில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், தெற்கு அபிவிருத்தி உப குழுவின் கணக்கு அறிக்கைகள் தொடர்பான தெளிவுபடுத்தல்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஒழுங்கமைத்து நடாத்திச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திறகு காலம் மீளாய்வு செய்து அந்த கட்டமைப்பினை பயனுள்ளதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு மீளாய்வினை மேற்கொண்டமைக்காக அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பணிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடைமுறையொன்று | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விசேட செயலணிக்காக ஆக்கபூர்வமான உள்ளக கணக்காய்வு நடைமுறையொன் | கணக்காய்வு மற்றும் முயாமைத்துவ குழுக்கள் 04 உரிய முறையில் நடாத்தப்பட்டுள்ளதுடன், வருடாந்த கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டினை பலப்படுத்துவதற்காக கணக்காய்வொன்று |

| | | |
|---|---|---|
| உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | று நடைமுறைப்படுத் தப்பட வேண்டியமை. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றளவில் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவின் கணக்காய்வு பணிகள் பாதுகாப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவ கடிதத்தின் 2.2 மற்றும் 3.4 ஆம் பந்திகளின் பிரகாரம் அமைச்சர்/ இராஜாங்க அமைச்சர் பதவியினை வகிக்கும் காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் உதவிப் பதவியணிக்கென ஒதுக்கப்பட்ட வாகனங்கள் அமைச்சின் விடயப்பரப்பு மாற்றமடையும் போது மீள கையளிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்கு சொந்தமான 04 வாகனங்கள் 2018 மார்ச் மாதம் முதல் இது வரையிலும் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த வாகனங்களை அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இது வரையிலும், அந்த வாகனங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வாகனங்களை மீள பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 12 செலவின விடயங்களின் கீழ் ரூபா 11.00 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 10.30 மில்லியன் எஞ்சியிருந்தது. சேமிப்பானது 80 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | குறைநிரப்பு நிதியேற்பாடு உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டியமை. | 2018 மே மாதமளவில் அமைச்சு, அரச நிர்வாக அமைச்சிற்கு இணைக்கப்பட்டமை மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவி இரத்தாகியமையின் அடிப்படையில் குறைநிரப்பு நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. |

### 2.2 முற்பணக் கணக்கு பணிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணி வறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 32 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 2.49 மில்லியனானதுடன், அதன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.05 மில்லியன் ஆகும். மேலும், | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு ஏற்பாடுகளின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 மே 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதியான ரூபா 1,178,896 தொகை வரையான 53 சதவீதமான குறைவான சதவீத செயன்முன்னேற்றத்தினை காண்பித்ததுடன், உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் 16 வரை குறைவடைந்துள்ளது. |

ஓய்வு பெற்றுச்சென்ற மற்றும் மரணமடைந்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 631,891 தொகையும் 2014 ஆம் ஆண்டின் போது பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 265,687 தொகையையும் அறவிடுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அமப/16/1991/740/010 மற்றும் 2016 ஒக்தோபர் 16 ஆந் திகதிய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட பெண்களின் தலைமையிலான குடும்பங்களுக்காக மூன்று வருட (2018-2020) தேசிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த நிறுவனமொன்றாக இந்த அமைச்சு பெயரிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த அமைச்சின் கீழ் 2018 ஆம் ஆண்டினுள் 20 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 2.75 மில்லியனான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு | தேசிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | நிதியேற்பாடுகளை வழங்குதல் தொடர்பில் கருத்திற்கொள்வதற்காக குறித்த திட்டம் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் , 2018 ஆம் ஆண்டின் போது நிதியேற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 16/1144/750/006 ஆம் இலக்க மற்றும் 2016 யூலை 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரச மொழிகள் கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்கு பொருத்தமானவாறு நிதியேற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் அமைச்சு மற்றும் திணைக்களங்களினுள் தனியானதொரு செலவின விடய இலக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அறிமுகப்படுத்தப்பட்ட 1703 செலவின விடய இலக்கத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அரச மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக ''மூலோபாயங்கள் தொடர்பான திட்டமொன்று'' தயாரிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | மூலோபாயங்கள் தொடர்பான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | திட்டம் இது வரையிலும் தயாரிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். இது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் கூடி கலந்துரையாடியுள்ளதுடன், அதன் தீர்மானங்களின் அடிப்படையில் 24 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | அமைச்சின் கீழுள்ள இலங்கை பொலிஸிற்காக வருடாந்த மதிப்பீடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள | மூலதன நிதியேற்பாடுகள் உச்ச செயற்திறனுடன் | 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சு பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்தமையால் |

| | | |
|---|---|---|
| மூலதன நிதியேற்பாட்டிலான சேமிப்பானது 2016-2018 காலப்பகுதியினுள் முறையே 39 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 36 சதவீதமான அளவில் காணப்பட்டது. அதற்கமைய இலங்கை பொலிஸின் கட்டிட நிர்மாணங்கள், தொடர்பாடல் வலைய அபிவிருத்தி, பல்கலைக்கழகங்களை நிறுவுதல் மற்றும் வாகனங்களை கொள்வனவு செய்தல் உள்ளடங்களாக அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தலின் கண்காணிப்பு பணி அமைச்சினால் நிறைவேற்றலின் குறைபாடொன்று நிலவியது. | பயன்படுத்தல். | குறித்த ஆவணத்தை படிப்பதற்கு சிறிது காலம் எடுத்தமையின அடிப்படையில் கண்காணிப்பு பணிகளில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் அடிப்படையில் பெறுகை நடைமுறையொன்று முன்னெடுத்துச் செல்லப்படும். |

**3.2 எதிர்பார்த்த அடைவினை பெற்றுக்கொள்ளாமை**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014-2017 காலப்பகுதியினுள், முன்னர் பொருத்தப்பட்ட 196 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 44 கட்டிடங்கள் பணிகள் நிறைவடையாமையின் அடிப்படையில் செயற்திட்டக்காலம் 2018 வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் | உரிய காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைந்துக்கொள்ளப்பட வேண்டியமை. | 5 முகாம்களில் 28 கட்டிடங்களுக்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதியே ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவடைந்திருந்ததுடன், மொத்த செலவினம் ரூபா 279.4 மில்லியன் ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுநிதி |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில் அவற்றுள் 19 இன் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், மேலும், 02 கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 279.5 மில்லியனான நிதியேற்பாட்டில் ரூபா 113 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. | | கிடைக்காமையின் அடிப்படையில் ரூபா 113 மில்லியன் தொகையான பொறுப்புகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டது. |
| (ஆ) | அமப/1610738/703/033 ஆம் இலக்க 2016 மே 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் கடமைகளுக்காகவும் விசேட செயலணியின் புலம்பெயர்ந்த செயலணியொன்று மாலி இராட்சியத்தினுள் தாபிப்பதற்கு தேவையான ஆயுதங்கள், கவச வாகனங்கள், மேம்படுத்தல் வாகனங்கள், தொடர்பாடல் உபகரணங்கள் உள்ளடங்களான ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைதி காக்கும் படையணியின் கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அந்நிய செலாவணிணை ஈட்டிக்கொள்ளல், உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி, சர்வதேச அனுபவத்தினை பெற்றுக்கொள்ளல், உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் மற்றும் | உரிய காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைந்துக்கொள்ளப்பட வேண்டியமை. | வழங்குநரால் முன்வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்குறிப்பீடுகளுடன் இணங்காமையும், அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதியானது உயர்வடைந்தமையும், பெறுமதி சேர் வரி வீதங்கள் மாற்றமடைந்தமையும், இறக்குமதி வரி அதிகரித்தமை மற்றும் விலை மதிப்பீடுகள் பாரியளவில் அதிகரித்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் குறித்த பெறுகை நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்ற முடியாதிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட அடைவ மட்டத்தினை அண்மிக்க முடியாதிருந்தது. |

தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பமொன்றினை வழங்குதல் போன்ற விடயங்களின் மூலம் உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் போன்ற விடயங்களை நோக்காக கொண்டு 320 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் போது பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு வருடங்களில் ரூபா 792 மில்லியனுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்கள் கட்டுக்குருந்த முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் கடமைகளுக்காக சேர்தல் 2019 மே மாதம் வரையிலும் நிறைவறியிருக்கவில்லை.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விசேட செயலணியின் கோனஹேன முகாமின் களஞ்சியத்திற்காக தச்சு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான இலக்கம் STF/LOG/C/267/2017 கொண்ட கட்டளைக்குரிய கொள்வனவின் போது அந்த தச்சு உபகரணங்களின் பொதுகளில் குறிப்பிடப்பட்டிருந்த அதி உச்ச சில்லறை விலையினை விட ரூபா | அதி உச்ச சில்லறை விலையினை விட கூடுதலான விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் பெறுகை நடைமுறையின் உத்தேச விலை | விலைக்கேள்வி கோரும் போது வற் வரியற்ற விலைகள் பயன்படுத்தப்படுவதுடன், அதற்கமைய குறிப்பிடப்பட்ட விலையை விட கூடுதலாக செலுத்தியுள்ள தொகை ரூபா 704,895 அல்ல ரூபா 211,498 ஆகும். மீள கேள்வி கோரும் செலவினம் மற்றும் விலை அதிகரிக்கும் |

| | | |
|---|---|---|
| 704,895 தொகை (VAT உடன்) செலுத்தப்பட்டிருந்தது. | நலன் இழக்கப்படுகின்றமையால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. | அபாயம் கவனத்திற் கொள்ளப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பொருட்களை கொள்வனவு செய்யும் போது உற்பத்தியாளருக்கு மற்றும் அதிகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரம் விலைக்கேள்வியினை சமர்ப்பிக்க முடியும் வகையில் மட்டுப்படுத்த மற்றும் மாதிரிகளை பரிசோதிப்பதனை முறைமைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விசேட செயலணியின் உள்ளக கணக்காய்வாளர் பதவி 2016 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டமையின் அடிப்படையில் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(எ) மற்றும் 40(1) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலகொன்றினை துரிதமாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்து உரிய பதவியணியை இணைப்பு செய்ய வேண்டும். | விசேட செயலணியின் உள்ளக கணக்காய்வு அலகொன்றினை தாபிப்பதற்காக கணக்காளர் ஒருவரை பெற்றுத்தருமாறு ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விசேட அதிரடிப்படையின் அங்கீகரிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 213 ஆக உள்ளதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட மொத்த துருப்பு படைகளின் எண்ணிக்கையில் 2 சதவீத அளவானதாக இருந்தது. அந்த எண்ணிக்கை தற்போதைய கடமைத் தேவைப்பாடுகளின் பிரகாரம் 1,005 வரை 792 இனால் அதிகரிக்கும் தேவைப்பாடு 2016 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் நிறைவேறியிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பெண் துரப்பினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தேவைப்பாட்டிற்கமைய துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்படைக்கப்பட்டுள்ள பெண் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணைப்பு செய்யப்பட்டுள்ள பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதிருந்தமையால் அதிகரிப்பதற்கு 2016 ஆம் ஆண்டு முதல் பொலிஸ் மா அதிபரின் மற்றும் அமைச்சிற்கு கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |